
குருவின் ஒளி நிழல்!
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா
T PORE

# “குருவின் தெளிநிஜ”!

# பொருளடக்கம்


1. குருவின் தெளிநிலை------------------------------------------1

௨. மாயா மனம்------------------------------------------௨1

௩. ஜீவ ரட்சிப்பு------------------------------------------௩௩

௪. ஜீவ சிட்சிப்பு------------------------------------------௩௩


5. ஜீவ அழிப்பு------------------------------------------௩6

6. ஓர் சாதகனின் தெளிவு------------------------------------------௪0

7. ஸ்வய அனுபவம்------------------------------------------௪8


எல்லாம் நீ!






# "ஸத்குரு திருவடி துணை"!!!

# "நம்பினோர் கெடுவதில்லை"!!!

# ஸ்ரீராம், ஜெயராம்; ஜெய ஜெயராம் ஓம்"

# "அகம்பிரம்மம், ஜெகம்பிரம்மம்",

# "அகமே எல்லாம்!!!"

# "ஜெகம், பரமும், ஜீவர்களும்",

# "சிறிதும் இல்லை!!!"

மனம் உண்டு என்றால், ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகள், உண்டு! தன்னை அறியும் அறிவு நாமே ஆனால்,

**"நாமரூபம்"**! அனைத்தும் இல்லவே இல்லை!

நாமரூபம் என்றால் பழம் ஆகும்! நாமரூபம் அழிந்தால் தான் பழம் சுவைக்கமுடியும்! சுவைத்தால் பழம் இல்லை!



சிஷ்யன் :- ஐயா! ஓர் சிறிய கேள்வி? அதாவது குருசிஷ்ய பாவனையில், ஒரு குருவிடம் பாடம் கேட்பவன், அடுத்த குருவிடம் பாடம் கேட்கலாகாது என்றும், ஒருவரிடம் தீட்சை (மந்திரம்) வாங்கியவன், வேறொரு குருவிடம், தீட்சை வாங்கவும் கூடாதென்றும், தன் தீட்சா மந்திரத்தை, இவரொருவரிடம் சொல்லவும் கூடாதென்றும், ஒரு குருவை விட்டு வேறொரு குருவிடம் மாறுவது, அபசாரமாகிய, "குருத்துரோகம்!" என்றும். பேசப்படுகிறதே, அதே சமயம் ஓர் அவதாரப் பிராமணன், 24 பேரை குருவாக ஏற்றுக்கொண்டதாக ஸ்ரீமத்பாகவதம் சொல்கிறதே; இப்படி பலரும் பலவிதமாக, "குருசிஷ்யபாவனையை" சொல்வதால் எமக்கெல்லாம் சற்று குழப்பமாக இருக்கிறது. இவைகளை சற்று, தெளிவுபடுத்த வேண்டுமென்று பணிந்து வேண்டுகிறேன்!

குரு :- இது நல்ல விளக்கமான கேள்வியே! இதைகவனி! குழந்தாய்! நீ இப்போது சொல்லிய "குரு சாசனை!" அனைத்தும் "சாமான்ய குருமார்களையே சாரும்! "ஸத்குருநாதருக்கு" இது பொருந்தாது! காரணம் ஸத்குருநாதர் பரசொரூபமாகும். சாமான்ய குரு "நாமரூப குண" சொரூபமாகும்! பரசொரூபஸ்திதியில் ஸத்குருவிடம் கண்டிப்போ, தண்டிப்போ, இதைச் சார்ந்த எந்த



# "குணதோஷங்களும்"!

இல்லாத தன்மையிருப்பும், ஸத்குருதேவர் ஓர் குழந்தையாகி தம்மையே, சத்சிஷ்யனிடம், பரிபூரணமாக நிறைந்துக் கொண்ட தன்மையிருப்பும். ~~(ஒட்டமாகவோ, ஏணியாகவோ அர்ப்பணித்ததால்)~~

"குரு"! அபசாரமோ; நிந்தனையோ, தோஷங்களோ, இருக்கப்பாதை இல்லை. இந்த ரகஸ்யம் இக்கவியால், எவர்க்கும் தெரியப் பாதை இல்லையென்றே சொல்லுவோம்.

காரணம்:— இந்த கவியால், அனைத்து ஸன்மார்க்க ஸ்தாபனங்களும், "பேர். புகழ். பட்டம். பதவி" போட்டி பொறாமை இவைகள் கவர்ந்த, "பொன்"னிலும், (பணத்திலும்) "பெண்"ணிலும், (இன்பிராக்கம் மோனம்) சிக்காத எந்த ஸ்தாபனங்களும் இல்லவே இல்லை. மேலும் மூன்றுவது நிலையாக, "மண்" என்ற, "பிரவர்த்தியில்"! அகப்படாதவர்களும் இல்லை! தன்னை உள்ளபடி அறிந்து "தான்தானாக"! இருந்து கொண்டு, தம்முடைய "ஆத்மப்"பிரகாசத்திறல், நம்பும் அன்பர்களை, மட்டும் பிரகாசப்படுத்தாமல் வாய்ஞானத்திறல், கர்மாப் பிரவர்த்திக்காக, "பிராண



“தீயிடும்” நாமும் தீப் படும்! கலிதோஷ மஹிமையால், இருக்கும் ஸாமான்ய குருமார்களுக்கே, நீ சொல்லக் கூடிய, குருத்துரோகம், குரு நிந்தனை, குரு அபசாரம் இவை அனைத்தும் பொருந்தும். இதன் விளக்கங்களை கீழே காண்க!

1. கண்டிப்பு தண்டிப்பு இல்லையானால், பாடம் ஏறாது என்பதே, கலிதோஷ ஆன்ம விளக்கமாகும்!

2. பேர், புகழ், பட்டம், பதவி, பிரவர்த்தி இவைகளின் நிமித்தமே, ஆன்மீக விளக்கம் தரப்படுகிறது!

3. வியாபாரம், விளம்பரம், ஆடம்பரம், இவைகளே, ஆன்மீக வளர்ச்சி யென, விளக்கம் தரப்படுகிறது!

4. பிறரை திருத்துவதே நோக்கமாக கொண்டு, தன்னை அடியோடு மறந்ததே, ஆன்மீகமாக கருதப்படுகிறது!

5. "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்பதை, "திவ்யமாக மாற்றி", ஸ்ரீ பகவன் நாமம்! ஸ்மரணையை மறந்து, நானே செய்கிறேன், என்றும்; என்னால் தான் செய்யப்படுகிறது என்றும், இவை அனைத்தும் என்னுடையதே என்றும், “ஸ்வாமியின்” “பணி” ஸ்ரீ பகவானிடம் சர்வார்ப்பணமாக விடாமல் தாமே ஏற்ற நிலையில் பேர் புகழ் பட்டம் பதவி, தாமே பெற்றலே, இன்றைய ஆன்மீக வளர்ச்சியாகும்.



நற்சமயம் "சக்திக்கே" உரிய காலமாக இருப்பதாலும், "பலன்" தருதியே செய்யும், "கலி" காலமாக இருப்பதனாலும், ஆத்ம ஞானம் என்பது, "வேத சாஸ்திர பாட" ஞானமாக (வாய் விளக்க ஞானமாக) இருக்கிறதேயன்றி அநுபவ ஞானமாக, எவரிடமும் இல்லையென்றே சொல்லுவோம். மேலும் இக்காலம், "ஸாமான்ய" குருவுக்கே, உள்ள காலமாக இருக்கிறது. "ஸத்குருவுக்கு!!!" உரிய காலமாக இல்லவே இல்லை!

"படிப்பறிவே" $\frac{100}{100}$ இருக்கிறது. ஆகவே எல்லோருமே, சக்தியின் பிரவர்த்தியாலும், வித்வத்வம் நிறைந்து; பொறுமை அமைதியின் ஆனந்தம் குறைந்து; "வித்வான்களே" அனைவருமாய் பிரகாசிக்கிறார்கள். எல்லோருமே இக்கலியில், உபதேசிக்கும் "குருவாக" இருக்கிறார்களேயன்றி, பாடம் கேட்கும், பணிவான "சிஷ்யர்கள்" ஒருவரையாவது காணோம்!



"**வித்துவான் கத்துவைரன்**!"
என்ற நிலையில், காலம் மாறிவிட்டது!
இனி இதை மாற்றவோ, மறுக்கவோ, விலக்
கவோ, எவராலும் முடியாது தான். ஆகவே
தந்தாவிக வித்தைகளை, கற்பிக்கும் குருமாரும்,
கற்கும் சிஷ்யர்களும், "**ஞானத்தோஷிக்
களுக்கு**"! ஆளாகிவிட்ட தன்மையிலே,
குருத்துரோகம், குருநிந்தனை, குரு அபச்சாரம் எனச்,
சொல்ல இடமே இல்லை! ஆனாலும் "**பேசப்படுகிறது**
"**ஆனாலும்**!!!
ஸ்ரீபகவான் கருணையினால், எங்கெங்கோ ஒன்றிரண்டு,
"**ஸத்தான குருக்களும்**!" இருக்கத்தான்
செய்கிறார்கள். (ஆனால் ஸத்குரு இல்லை)
அவர்களின் கருணையினால், ஸ்ரீ பகவத் பக்தியும்,
அதற்குரிய ஒழுக்க நெறிகளும், போதிக்கப்படுகிறது.
அப்படிப்பட்ட குருமாரால், தெய்வங்களை உணரும் நிலை
யும், தெய்வ தரிசனங்களும், இன்றும் நிலைபெற்றுத்
தான் வருகிறது. அவர்கள் ஸ்ரீ பகவான் கிருபையை,
பரிபூரணமாக பெற்று, பக்தியின் அடிப்படையான,



உ

சில ஒழுக்க தர்மங்களை போதிப்பதால் அவைகள், "வெளியில்" தெரியாத மறைபொருளாக நடந்து வருகிறது என்பது "ஸத்தியமே"! அப்படிப்பட்ட குருமார்களிடம், பாடம் கேட்கும் ஸத் சிஷ்யர்கள், எப்படி யிருக்க வேண்டுமென்றால்?

1. நிலைகண்டு, பொருள் கொண்டு, ஒருவரிடம் பாடம் கேட்பவர்கள் வேறொருவரிடம், பாடம் கேட்கவாகாது. காரணம். கருத்து மாறுபாட்டால், அனுபவம் கூடாது.
2. ஒருவரிடம் மந்திர தீட்சை, வாங்கியிருந்தால், அதை மறக்கவாகாது. வேறொருவரிடமும் சொல்லவாகாது. சொன்னால் அது பலிதமாகாது.
3. ஒருவரிடம் மந்திர தீட்சை வாங்கியவர், வேறொருவரிடம், மந்திர தீட்சை வாங்கவாகாது. அது மஹா அபசாரமும். அதுவே குருத்துரோகமும் ஆகும்.
4. ஒருவருக்கொருவர் தங்கள் குருவை உயர்த்தி, அடுத்த குருமார்களை தாழ்த்தி, எண்ணவோ பேசவோ கூடாது. அது குருப்பிரஷ்டமாகும்! (கீழான ஜன்மா கிடைக்க ஏதுவாகும்!)
5. தன்குருவையே தனக்குப்பிடிக்காத்தன்மையால், நிந்தனை செய்து விலகுவானாயின், மலத்தில் புழுக்கும் கிருமியாகவும், உலர்ந்த புல் பூண்டாகவும், பிறக்க ஏதுவாகும். இப்படி இன்னமும் அனேகம் உண்டு. இவை அனைத்தும், "சக்திகுருமார்"



"கஞடைய" உத்தம சிஷ்யாளுக்கு பொருந்தும் என, ஸ்ரீமஹான்களுடைய அநுபவ வசனம் இருக்கிறது.

ஓர் அவதூத பிராமணன், ௨௪ பேர்களை, குருவாக ஏற்றுக் கொண்டதாக ஸ்ரீமத் பாகவதம் சொல்வதும், "ஒழுக்கம், கட்டுப்பாடு", தெய்வ "நம்பிக்கை", தம்முடைய லட்சியத்தில் அசைக்க முடியாத "வைராக்கியம்", இவைகளை போதித்து, "ஓர் ஸத்குருவை" அடைந்து, ஜீவன் முக்தியாகிய "நிர்வாணில்" வெறும் நிலைக்கு தகுதி வழங்கும் "குரு" நியமம்.

மேலும் ???

ஓர் ஸத்குரு தேவரிடம், எந்த மந்திரமும் தீட்சைகளும் இருக்கவும் முடியாது! இருக்கவும் கூடாது!! இருந்தால், அது ஸத்குரு ஸ்தானத்திற்குப் பொருந்தாது.

ஓர் ஸத்குருதேவர், வேத சாஸ்திர அனுபவம், உடையவராக இருக்கமாட்டார். ஆனால் மேலே கூறிய, ஒழுக்கம் கட்டுப்பாடு இவைகளை, போதிப்பவராக இருக்கமாட்டார். தம்முடைய "ஸந்நியாஸ்" உணர்த்துபவராக இருப்பார்.

ஓர் ஸத்குரு தேவர், நான்கு "மஹாவாக்யே"த்தை,



உ

விளக்குபவராக இருக்கமாட்டார். "விளங்கியவராக"! இருப்பார். நான்கு மஹா வாக்கியமும் அவரிடம் இராது. நான்குமஹா வாக்கியமும் "அவராகவே"! இருப்பார். இதற்கு உதாரணமாக, "குற்றங்குறை"/ "விருப்பு வெறுப்பு"! "பேதம்"! இவைகள் இல்லாதவனே, நான்கு மஹா வாக்கிய ரகஸ்யமாகும்! மேலே கூறிய இம் மூன்றும், இல்லாதவன் இருந்தும் (இறந்தவனே) இல்லாதவனே! இப்படிப் பட்டவனிடம், கண் காணிப்பு, "கண்டிப்பு", "தண்டிப்பு"! எவ்வாறு இருக்கக்கூடும்? நான் இறந்தால்தான் நம் அனுபவத்தால், அவன் "நம்புபவனையும்" "சாகடிக்க" (இறக்கவைக்க) முடியும்? ஆகவே திரிலோகத்தில், "ஒருவன்"! என எமதண்ணால் சொன்னதை போன்று, ஸ்ரீ ஸத்குரு இல்லவே இல்லை. ஆனால் கண்ணாடிக் கல்லே, வைரம் போல் ஜ்வலிப்பதுவே, இக்கலி



காலமாக இருப்பதால் (இருந்தே ஆக வேண்டும்) "சக்தி" குருவே, "ஸத்குரு!" போல் பிரகாசிக்க வேண்டும்.

"இதுவே கலியுக நியதி" ஆகும்.

மேலும் ஓர் அவதூத பிராமணன், ௨௪ குருமார்களைப் பெற்றதாக, ஸ்ரீமத் பாகவதம் சொல்கிறது. அக்குருமார்கள் யார் என்பதையும்? அவர்கள் என்ன கற்பித்தார்கள் என்பதையும்? அதனால் நாம் உணர்வது என்ன என்பதையும் சில சொல்லி, உணர்த்துகிறேன்!

(1) மீனவன்:- ஓர் மீனவன், ஓர் குளத்தில், தூண்டில் போட்டு, மீன் பிடித்துக் கொண்டிருந்தான். அவ்வழியே, ஓர் வழிப் போக்கன் வந்தான். அந்த இடத்தில் பாதை இரண்டாக பிரிகிறது. வந்த வழிப் போக்கன், அம்மீனவனிடம் சென்று அவ்விரு வழிகளில், தாம் செல்லும் ஊரின் பெயரைச் சொல்லி, செல்லும் மார்க்கத்தை கேட்டான். அதுசமயம் மீனவன், தூண்டிலில் கவனமாக இருந்ததால் வந்தவனையோ அவன் வார்த்தைகளையோ, மீனவனால் கவனிக்க முடியவில்லை. அவன் கவனம் முழுவதும், தூண்டிலின் மிதப்புக் கட்டை மீதே இருந்தது. வந்த வழிப் போக்கனும், பல முறை கேட்டும், பதிலளிக்காததால், இவன் செவிடன் போலும், என எண்ணி, தன் கால் போன வழியில், சென்று கொண்டிருந்தான். அம்மீனவன் தூண்டிலில், மீன் சிக்கிக் கொண்டது போலும்? உடனே அம்மீனை, தூண்டிலின் மூலமாக, வெளியே இழுத்துப் போட்டுவிட்டு ஐயா! ஐயா! தாங்கள் ஏதோ கேட்டீர்களோ? அது என்ன விஷயம்? என கேட்டுவிட்டு, அவ்வழிப் போக்கனுக்கு, வழி காண்பித்தான்.



உ

அன்பின் குழந்தாய்! இதை அங்கு, தெய்வாதீனமாக வந்த அவதூத பிராமணன் கவனித்தான். அவன் சொன்னதாவது:- ஸ்ரீ பகவானே! இம்மீனவன் எம் குரு ஆகும்! இம்மீனவனைப் போல், எம் கவனம் சிதறாமல், லக்ஷியத்தில் நிலைத்திருக்க வேண்டும். உலகம் கர்மா சம்பந்தம். யாம் லக்ஷிய சம்பந்தம். இல்லாத உலகம், நிலை பெயரினும், யாம் எம் நிலை பெயராமல் இருக்க வேண்டும், என வேண்டிக் கொண்டான்!

௨ பருந்து:- ஒரு பருந்து ஓர் மாமிசத் துண்டை, எங்கேயோ எடுத்தது. அதை உண்ண ஓர் மரக்கிளையில் அமர்ந்தது. இதை மற்ற பருந்துகளும், காகங்களும் கண்டன. அந்த இரையின் மீது, ஆசை கொண்டு, அப்பருந்துகளும் காகங்களும், மாமிசம் வைத்திருந்த பருந்தை, விரட்டி விரட்டி கொத்தி, அவ்விரையைப் பிடுங்க எத்தனித்தன. மாமிசம் வைத்திருந்த பருந்தும், அவ்விரையை உண்பதற்கு, பல மரங்களிலும், பறந்து பறந்து அமர்ந்தது. அப்பருந்தால், அவ்விரையை உண்ண முடியவில்லை. எல்லாப் பறவைகளாலும், கொத்தப்பட்டதோடல்லாமல், தானும் அவ்விரையை, உண்ண முடியாமல், துக்கத்தை அடைந்த அப்பருந்தானது, இத்தொல்லை இனி நமக்கு வேண்டாம் என, அவ்விரையை விட்டுவிட்டு, தனியே ஓர் மரக்கிளையில், ஆனந்தமாக அமர்ந்து விட்டது.



அம்மாமிஸத்துண்டை, வேறொரு பறவை
எடுத்துக்கொள்ள, எல்லாப்பறவைகளும்,
அம்மாமிஸத்தை நோக்கிச் சென்று, பற
வையை, விரட்ட ஆரம்பித்தன.
இப்பறவையை விட்டுவிட்டன!

அறிவின் குழந்தாய்! இதை தெய்வாதீனமாக அங்குவந்த
அவதூதபிராமணன் கவனித்தான். ஹேபகவானே! இந்த
"பருந்து"! எமக்குக் குரு ஆகும் என்றும், இப்பருந்து
போல, மண் பொன் ஆசையென்னும், மாமிஸத்தை
விட்டுவிட்டு, அப்பருந்தைப் போல், "ஏகாந்தமா
க"! இருந்துகொண்டு, கண்மூடி "மௌனியாய்"!
"உன்னோடு"! ஒன்றியிருக்க, அருள்வாய் என்றான்.

(3) மலைப்பாம்பு:— மலைப்பாம்பு இரையை தேடி
அலையாது. ஸ்ரீபகவான் கருணையால், "விதி"
முடிந்த எந்த ஜீவனையாவது, இரையாக இறைவன் அனுப்புவான்.
அப்பாம்பு, யதேச்சையாக வந்த, அந்த இரையை
உண்ணும். இரையை உண்ட அப்பாம்பு, தாகசாந்
திக்காக, நீர்நிலையை நாடி தேடிச் செல்வதில்லை!
இருந்த இடத்தில் இருந்துகொண்டே, அப்பாம்பு
ஆகாயத்தில், ஜலத்தைத் தேடும். இறைவன் கருணை
யினால், மேகம் கூடி மழை பொழியும். யதேச்சையாக
பெய்யும், மழை ஜலம் அருந்தி சுகமாக இருக்கும்!



எம் ஞானச் செல்வமே! இதைக் கவனித்த இந்த, அவதூத பிராமணன் சொல்லுவான்! ஹே பரமாத்மா! இந்த மலைப் பாம்பை, எம் குருவாக ஏற்றுக் கொள்கிறேன். இப்பாம்பைப் போல், யாம் எதையும் "நாடி தேடி" செல்லாமல், எம் வினையின்படி, "எம்மை" நாடித் தேடி வருபவைகளை மட்டும், "ஈஸ்வரார்ப்பணமாக" ஏற்றுக் கொண்டு, உன் நாமஸ்மரணையில், ஆனந்தமாக இருக்க, அருள் புரிவாய் என்றான்.

(4) ஆட்டக்காரி:- ஓர் கரக (கும்ப) ஆட்டக்காரி, குடத்தை தலையில் வைத்தவண்ணம், ஓர் பெரும் கூட்டத்தில், ஆடிக் கொண்டிருந்தாள். அவள் அக்கூட்டத்தில், சிலருடன் சிரிப்பாள். சிலரின் கையைப் பற்றி இழுப்பாள். சிலர் பைகளில் தன் கையைவிட்டு, பணம் எடுப்பாள். சிலரிடம் கண் சிமிட்டுவாள். இப்படிப் பலரிடம், பலவாறு நடந்து கொண்டாலும், அவள் "கவனம்" தம் தலைமீதுள்ள, "குடத்தின்" மீது தான் இருக்கும். (தாதி ஹீனியாடி கைவீசி வந்தாலும் தாதி மனம் குடத்தின் மீது தான்) இதை கவனித்த,



இந்த அவதூத பிராமணன் சொல்லுவான்.
ஹே பகவானே! இந்த நாதி எம் குருவாகும்.
இந்த நாகியைப்போல், இந்த அஞ்ஞான
ஜனசமூகத்துடன் திரிந்தாலும்,

"பேசலும் பிதற்றலும் இங்கே!
"ஆசையும் நேசமும் அங்கே!

என்ற நிலையில், புளியம் பழமும், ஓடு போலவும்.
எந்த குணதோஷங்களும்; எம்மை ஒட்டாமல்
உன்மீதே எண்ணம் உள்ளவனாக, இருக்க அருள்புரி
வாய் எனவேண்டினேன்.

(௫) ஓர் குடும்பப் பெண்:— ஓர் குடும்பப் பெண்,
உரலில் அரிசியை போட்டுமாவு ஆட்டிக் கொண்
டிருந்தாள். அதுசமயம் ?

A. தன் குழந்தைக்கு, கொஞ்சம் கையில் பால் கொடு
த்துக் கொண்டிருந்தாள்.

B. ஓர் பால்காரனிடம், பால் கணக்கை சொல்லி,
கணக்கு தப்பாமலும் இருந்தாள்.

C. ஓர் மளிகைக் கடைக்காரனிடமும், சாமான்
விபரம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

D. ஓர் ஜவுளி வியாபாரிக்கு, இவ்வளவு பணம் கொடு
என தன் மகனிடம் கணக்கும், சொல்லிக் கொண்
டிருந்தாள். இத்தனை காரியம் பார்த்தாலும்,
மாவாட்டும் வேலையில், சிரத்தையாக இருந்து,



கொண்டு "தன் விரல்" உரலில்
சிக்காவண்ணம், "கவனமாக"
வும் இருந்தாள்! இவளைக் கவனித்த,
இந்த அவதூதப் பிராமணன், சொல்லுவான்:
ஹே பரமாத்மா! இக்குமரிப் பெண், எம்மு
டைய குருவாகும். இக்குமரிப் பெண், உலகிய காரியங்
கள் பலபல செய்தாலும், "தன் கவனம்!"
தன்னை விரல், உரலில் சிக்காத வண்ணம், எப்படி
"எச்சரிக்கையாக"! இருப்பது போல், யானும்
எம் வினை உடல், வினை சம்பந்த காரியங்களில், ஈடுபட்
டாலும் எம் மனம் "தற்கவன சக்தி"!
யோடு, புணியம் பாவமும் ஒரு போதும், உலகியலில்
ஒட்டாமலிருக்க, அருள்புரிய வேண்டுமென வேண்டுகிறேன்.

(6) சந்திரன்:— சந்திரனைப் பார்த்து இந்த அவதூத
பிராமணன் சொல்லுவான். இச் "சந்திரன்"!
எம் குருவாகும் என்றான். ஹே பகவானே! இச்சந்திரனை
வன், சூரியனுடைய கடுமையான கதிரியக்கங்களை,
தாம் ஏற்றுக் கொண்டு, நமக்கு இதமான (குளிர்ச்
சி யான்) கொடுப்பது போல், யானும் "கடுமையா
ன குணதோஷ" இதத்தை ஜனசமூகத்தில் சஞ்சரித்தாலும்
ங்களை உடைய



அக்குண கோடிங்களையாம், ஜீரணித்துக் கொண்டு, அனைத்து ஜீவகோடிகள் மீதும், “ஸ்ரீபகவத்பிரேமை”! என்னும், அன்பை மட்டும் செலுத்தி அன்பின் சொரூபமாகவே, இருக்க அருள்வாயாக, என பணிவுடன் வேண்டிக் கொண்டான்.

(7) சகோரப்பட்சி:— சகோரப்பட்சியானது, ஆகாயத்தில் அதி உயரப் பறக்கும். அது எக்காலமும், பூமிக்கு இறங்குவதில்லை. வாயுவே அதன் ஆகாரமாகும். இனச் சேர்க்கையால், அவை ஆகாயத்திலேயே முட்டையிடும். அடைகாக்காமலேயே, சூரிய வெப்பத்தினால், குஞ்சு பொரிக்கும். பூமியின் ஈர்ப்பு சக்தியால் குஞ்சுகள் பூமிக்கு இழுக்கப்படும். அக்குஞ்சுகளும், தெய்வபலத்தால் தாம் கீழே இழுக்கப்படுவதை உணர்ந்து, உடனே மேல் நோக்கி பறக்க ஆரம்பித்துவிடும். அப்பறவைகள் விதி முடிந்து, மரணம் அடைந்தால், அவைகளின் தேகம் பூமி நோக்கி இழுத்து வரப்படும். ஆனால் இறைவன் கிருபையினால், சூரிய வெப்பத்தாலும், காற்றாலும் கிரஹிக்கப்பட்டு, பொடிப் பொடியாகி, தூசி ஆகி, ஜீவ அணுக்களாகி, “ஆத்மாவாகி”! பரமோடு பரமாகி விடும்.

(இதை ஞானிகள் சிவசமயம், காரண சம்பந்த தேகம் ஏற்கும், பிராப்தம் இருந்தால், லீனா! பற்றமல் இருப்பதற்காக, இவ்வடிவை ஏற்கிறார்கள் என, ஸ்ரீ மஹான்களின் அனுபவ வசனமாக இருக்கிறது.)



உ

இந்த சகோரப் பட்சியின் நிலையை, உணர்ந்த இவ் அவதூத பிராமணன், சொல்லுவான்:— ஹே பரமாத்மா! எம் தாலமும், வினை விதி வசத்தால், ஆவியில் சஞ்சாரம் செய்தாலும், "ஏகாக்ரமாவும்" பற்றற்ற நிலையில், "இயல்பாக!" இருப்பதிலும், கிடைப்பதிலும், நடப்பதிலும், "பூரணநிறைவாகவே" இருக்க அருள்புரிவாயாக, என வேண்டிக் கொண்டான்!

இந்த விதமாக ஓர் அவதூத பிராமணன், உபதேசம் பெற்ற குருமார்களில், "நமக்குகந்த" (நம் ஆத்ம ஞான பாடத்திற்குகந்த) ஏழுபேரை மட்டும், தொகுக்கச் சொல்லு, அவன் ஆணையுடன், அவனே தந்தான். மற்றும் பதினேழுபேர், நமக்குத் தேவையில்லை போலும்? இதன் மூலமாக சில, "ஒழுக்கநெறி, வைராக்கியங்கள்!" நமக்குத் தேவை! இவைகளை அறிவு சார்ந்து நாம் நோக்கும்போது, நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன முதலிய அனைத்து ஜீவ வர்க்கங்களும், "உலகமே! நம் ஆத்ம ஞான சாதனையின் நிமித்தம், ஓர் பயிற்சிக் கூடமாகவும்; பயிற்சியின் ஆசிரியர்களாகவும்.

(உலகம் நாடகமேடையாகும். ஜீவவர்க்கங்கள் ஆசிரியர்களாகும்)



உ

நாம் எழுந்துக் கொண்டால்? நலம் பெற முடியும்.

"விரோத குரோதமிலே"!

"கஷ்ட நஷ்டமிலே"!

"சோதனை வேதனையிலே"!

"சொந்த பந்த பாச உறவிலே"

"புண்ணிய பாப வினைகளிலே"

அதனால் "ஜனனமரணமிலே" என்றுகிட விடும்!!!

ஜகத்தாகவும் அனந்த ஜீவ கோடிகளாகவும்.

"நாமரூபங்களாக" பார்த்தால்,

குண தோஷங்கள் பின்னி விளையாடி, புண்ணிய

பாபமென்னும், வினைகளைப் பெருக்கி, ஜனனமரண

மென்னும், சுழலத்தில் (பள்ளத்தில்) தள்ளி விடும்!

மேலே சொன்ன, ஸாமான்ய குருமார்களாலேயே இவ்

வுலகம், விளங்கப்படுகிறது என்பது, ஐக்கியமே!!!

ஆனால் ஜீவன் முக்திக்குமட்டும், ஸத்குரு தேவை!



உ

ஸ்ரீமத்பாகவதத்தில் சொல்லும்,
24 குருமார்களும், போதிக்கவரவில்லை
தங்களுடைய நடைமுறை வாழ்க்கை
யாகவே, "நாம் சாதனையாக"
இருந்துகொண்டு, தம் அனுபவத்தை
மட்டும், நமக்கு காட்டாமல் காட்டி, சொல்லாமல்
உணர்த்தி, "முழுபலனையும்" தந்தவர்களாகும்.

ஆனால் கலியுக போதனை குருமார்கள், தாங்கள் போதி
ப்பதோடு சரி. அவர்களும் சாதிப்பதும் இல்லை.
ஆகவே அவர்கள் போதனையானது, பலனளிப்பதுமில்லை

இதில் கூறும் குருமார்கள் அனைவரும், மனிதனாகவும்,
பறவையாகவும், ஊர்வனவாகவும், நடப்பனவாகவும்,
இருந்தாலும், அவர்கள் நமக்கு "போதிக்க"
வேணுமென்று, அவர்கள் சாதனையை காட்டவில்லை.
இயற்கையாகவே ("இறைவன்" செயலா
வேயே) அவை நடந்தன. அவை நமக்கு அனுபவ
பாடமாயின. இதிலிருந்து என்ன உணர்கிறோம்
என்றால், போதனையோ, சாதனையோ, நாம் செய்கிறோம்
என்ற எண்ணமில்லாமல், "அவன்" (இறைவன்)
ஆட்டுகிறான். நாம் ஆடுகிறோம் என்று



ஒரு எண்ணத்தை மட்டும், மனதில் கொண்டால் அனைத்துமே முழுமையான "சாதனையாக"! மாறி, நல்ல பலனை தானே தரும். நாம் சாதிக்க வேண்டும், என்ற எண்ணம் கொண்டால், அவ்வெண்ணமே நம் சாதனைக்கு தடையாய் முடியும்!

இதைத்தான் எம் ரிபு முனிவன், தன் 14 வது பாடலில் சொன்னான்.

நரர் சுரராய் திரியக்காய் நகவனாதி,
நானாவாய் நாடியிடும் நாட்டமெல்லாம்,
தெரிவுருவாய் திகழ்கின்ற தேவதேவன்,
திருவுருவே என்று திடத்தியானம் செய்து,
இருகுணமும் இழந்து அமல ஸத்வம் மேவாய்,
இருக்கின்ற இட்சும மனோவிருத்தி கொண்டே,
பரமசிவன் பரிபூரண சொரூபம் தன்னை,
பார்த்திடலாம், மற்றொன்றல் பார்க்க வொண்ணா!

என்றான்!

அனைத்து ஜீவ கோடிகளியும், அதாவது மனிதன், மற்றும் நடப்பன, பறப்பன, ஊர்வன, நீந்துவன, ஆகிய அனைத்து ஜீவர்களையும் "நாமரூபமாக"! பார்ப்பது, உன் மனோமய, கற்பனை சொரூபங்களாகும். அவைகள் எங்களுக்கு, இன்ன நாமமாயிட்டு அழையுங்கள் என சொன்னதும் இல்லை. வேறு நாமமா சொல்லி அழைத்தாலும், அவைகள் மறுக்கப் போவதும் இல்லை. அப்படி



உ

நீங்கள் நாமா சொல்லி, அழைக்கும்
போது, இது இன்னது, இது இன்னது
செய்யும், இதன் சுபாவம் இத்தகையது,
என ஒவ்வொன்றுக்கும், உங்கள் கற்பனையி
னாலேயே, "குணங்களை"யும்
கொடுத்துக் கொண்டீர்கள். அக்குணங்களே, "ரஜஸ்"
"தமஸ்" என இருகுணங்களாயின. இப்போதுஇந்த
நாமரூபங்களுக்கும், அதன் குணங்களுக்கும், அவைகளும்
பொறுப்பல்ல. நம் இறைவனும் பொறுப்பல்ல. முழு
நீங்களே அதாவது உங்கள் "மனமே" பொறுப் பாகும்.
இவை நெடுங்கால, பழக்க வழக்கங்களால் வந்ததாகும்.

பழக்கம்:— வார்த்தையின் விளையாட்டு!
வழக்கம்:— செயலின் விளையாட்டு!

ஆகவே இங்கு, எல்லாமே இறைவன் படைப்புதானே
என்றும், எல்லாமே இறைவன் செயல்தானே என்றும்,
உங்கள் அனுபவத்திற்கு வந்துவிட்டால், சந்தேகம்
கலக்கம், பயம், துக்கம் எங்கே உண்டாகும்?
உங்கள் மனதால் போட்ட தடையாகிய நாமரூப குணங்கள்,
இல்லையென ஆகிவிட்டால், அங்கு இருப்பது "ஒருவன்"
தானே? அவன் "இறைவன்" தானே இருக்க முடியும்?



உ

"பயமே பலிதம்" என்பது போலும் "எண்ணமே" (வாக்கே) "வாழ்க்கை" என்பது போலும், ஓர் வலையை (கவலையை) நீங்களே உண்டு பண்ணியும் நீங்களே இஷ்டப்பட்டு "கஷ்டங்கள்" வாங்கிக் கொண்டால், இறைவன் தான் என்ன செய்வான்? மனம் இல்லாத மஹான்கள் தான் (குருதேவர் தான்) என்ன செய்வார்? "பிரமாணமாக" சொல்கிறோம்! உங்கள் மாயா மனதின், நாம ரூப குண தோஷங்களை, விட்ட மறுக்ஷணம், அங்கு "ஸ்ரீ பகவான்" தானே இருக்க முடியும்? இருக்கக் கூடும்? வேறு எவர் உளர் இங்கு? மாற்றான் (திருடன்) போலும், பூதம் போலும் உள்ள "முகமூடி" அணிந்து, தன் தங்கையிடம் விளையாட்டாக அவள் அண்ணன் வந்து, பய முறுத்தும் போது, "அண்ணா"! (கண்ணா) எம்மை பயமுறுத்தியது போதும், என "உருகி" வேண்டினால், அவன் தன் முகமூடியை, கழற்றி எறிந்து விட்டு, உன் அண்ணாவாக (கண்ணனாக) அவசியம் நிற்பானே! இங்கு உன் மன உருக்கமும், கண்ணீரின் பெருக்கமும்



நான் அவன் "முகமுடியை"! (மாயையின் திரையை) அகற்ற முடியுமே யன்றி வேறு எந்த மார்க்கமும், பலனளிக்காது என்பது, எம் ஸ்வய அனுபவமாகும்!

இதை உணர்!

இருப்பது "ஒன்றே"! அதை உண்மையென, கற்பனை வடிவில், "பிரபஞ்சமாக" கண்டாய்.

அக்கற்பனையை விடுவது, உன் மனதின் வேலையாகும்.

அக்கற்பனையை விடுவது, மனமற்ற இறைவன் வேலையில்லை.

ஆனாலும், உன் மாயாமனம், வந்த இடமோ, இறைவனின் மாயாவாகும். உன் மனம் வந்த இடத்திலேயே உன் மனதை விடுவது என்றால், "ஒரே வழி"!

"நான்", "என்னை", "என்னுடையதை" நீக்கு. அகற்று மாற்று "எல்லாம் நீயே! எல்லாம் உன்னை! எல்லாம் உன்னுடையதே!"

என ஆக்குவாயாக. அவ்வாறாகவே ஆகி விடுவாய்! இது ஸத்தியம்.



"எல்லாமாய் எங்குமாய்" நிற்பவன் ஒருவனே!
உன் உள்ளம் என்ற கண்ணாடி "மோஹத்தினால்" உடைந்து
போன தன்மையினால் உடைந்த கண்ணாடியில் பல
உருவம் தெரிவதுபோல் பலபல நாமரூபமாக
அவனே தோற்றுகிறான்.
மோஹமும், போகமும், இணைந்த தன்மையினால்,

மோஹம்:- சின்னசின்ன ஆசைகள், அழிக்கப்படாத்
தன்மையினால், அவை பெரிய ஆசைகளாய் விரிவடைந்து
மறுக்க முடியாத, மாற்ற முடியாத, விலக்க முடியாத
விடமுடியாத, ஆசைகளாகி, விளக்கில் படிமென,
மயங்கி விழும், விட்டில் பூச்சியென ஆகுதல்!

போகம்:- மேலே கூறிய, விடாப்பிடியான "ஆசையால்" அரிப்பெடுக்கும் படைபோல்,
விடாமல் சொரிந்து, சொரிந்து, ரணமாகி,
"புரையோடி" அப்பாகத்தையே இழக்கும்
(வெட்டி எறியும்) அவலநிலை!
"புனராபி ஜனனம் புனராபிமரணம்"
(இதுவே மோஹ போகத்தின் தன்மை)



உ

பற்பல நாமரூபங்களாக தோற்றி

உண்மையை மேற்போகங்களுக்கு,

ஆட்பட்டு விட்டது. அங்கு?

"**எல்லாம் ஒருவனே**"!

நாம் அவன் குழந்தையே! அதேபோல் அனைவரும்,

அவன் குழந்தைகளே என்பது, சந்தேகமற

"**உறுதி**"/ நிச்சயமானால்; உண்மைக் கண்ணாடி

உடையவில்லையெனப் பொருள் கொள்வாயாக.

மனக் கண்ணாடி உடையாத நிலையில், அனைத்து

நாமரூப மயக்கங்களும், இல்லாதொழியும்!

நாமரூப மயக்கம், இல்லையானால், அங்கு இருப்பது

"**ஒருவனே**"/ அவன் நம் "**இறைவனே**".

"இறப்பும் பிறப்பும் பொருந்த, எமக்கெவ்வண்ணம்

வந்ததுஎன, எண்ணி (அறிவு ஊன்றி)

பார்த்ததில், **நினைத்தும், மறைத்துமாய்**!" நின்ற வஞ்சனையான,



"மாயா மனதால்"!
வந்தது எனத் தெளிந்தோம்!"
என்றார் ஓர் அன்பர். இதிலிருந்து
என்ன உணர்கிறோம் என்றால்?

காலாதீத "ஒன்றே" சுத்தம்! அது ஸத்யம்!

இயக்கமற்ற அது, இயங்குவதற்காக, இறை
சொரூபமாக வந்தது. தம் நிழல் வடிவமான,
"மாயாவினை"! உலகை தோற்றுவித்
தது. "அவ்வுலகில் விளையாடும் நிமித்தமாக,
தாமே அனைத்து ஜீவகோடிகளும் ஆனது. விளையாடு
வதற்கு, ஓர் "உபகரணம்"! தேவையென
தாம் மாயாவிலிருந்து, "மனதை" உண்டு
பண்ணிக் கொண்டு, அம் மாயா மனதினால், அனைத்தை
யும் (மனிதவர்க்கத்தை மட்டுமே) பற்றச் செய்து,
அப்பற்றினால், விளையாடிக் கொண்டிருக்கிறது. இங்கு
பற்றப் படுவது "நாமரூப ஜகம்!"
பற்றியிருப்பது "மாயாமனம்!!"



உ

மனதால் பற்றப் பட்ட இந்த, "ஜீவனவன்"! (மனிதனவன்)
நாம் இறை சொரூபம், என்பதை மறந்து,
"மோஹத்திலும் அதன் போகத்திலும்,"
முன்கூறிய அஹங்கார, அதிகார, அபிமான,
ஆதிக்க வெறிகளால், பீடிக்கப்பட்டு "நான்"!
கஷ்டப்படுகிறேன்! "நான்"! சுகப்படுகிறேன்!
என்று "மனஎண்ணத்தால்"!
சஞ்சலப்படுவது "போல்" நடித்து விளையாடிக்
கொண்டிருக்கிறான். இது விளையாட்டே தவிர, இது
"விஷயம்"! இல்லவே இல்லை. ஆனால் மனம்
படைத்த, அனைத்து மனித இனங்களுக்கும் மட்டுமே, இது
விளையாட்டாக, தென்படாமல், விஷயமாக (விஷயாக)
தோன்றுகிறது. இது "மனதின்"! கோளாறே
தவிர; இது மனிதன் (ஜீவாத்மாவின்) கோளாறு அல்ல
இம்மனிதன் யாம் ஜீவனல்ல என்ற, உறுதி நிச்சயம்



உ

தம்மனதால் செய்து, அதே மனதால்

ஆரம்பநிலையென்றால், நாம் இறைவனின்

"குழந்தை" என்றும், முடிந்த பக்

குவம் ஆனநிலையென்றால் நாம் "இறைவனே"

என்றும், களங்கம், கலக்கம், பயம், அற்றநிலையில்

"மனம்" தெளிவடைந்தால், நாமரூப ஜகஜீவ

சொரூபங்கள், தோன்றுதும் மறைந்து விடும், அங்கு

அனைத்தும், "இறைவனாக" தோற்றவாம்!

அல்லது அனுபவ முதிர்ச்சியினால்

அனைத்தும் "நாமாக" தோற்றவாம்!

இந்நிலை கிட்டும் போது, குரு கிருபையினால் (அவர்

வாக்கிய சிரத்தையினால்) "அகண்டபா

வன்" வெகு எளிதாக கிடைக்கும்! இதுவே

சர்வசாட்சித்தன்மையாகும்! இதுவே ஜீவன்முக்தி

இறைநிலையென்ற சாட்சிதன்மை பெறாமல், அகண்டபாவனையா

கிய, சர்வசாட்சித்தன்மை பெறமுடியாது. ஆகவே அகண்ட

பாவனையே, ஜீவன்முக்தனின் லட்சணம் ஆகும்.



"நாமரூப" ஜகமானது, ஓர் விளையாட்டு கூடமாகவும், விளையாடும் பொருளாகவும் உள்ள, "ஜட" சொரூபமாகும்.

மனிதனின் தூலவுடல், புண்ணியபாப சம்பந்த, "வினைப்" பதுமையாகும்! இதுவும் "ஜடமே!"

இவ்வினையை இயக்குவது, "மாயாமனம்" ஆகும்! இம்மனம் சூட்சுமமாகும். இந்த சூட்சும மனதை இயக்குவது, "விதி" யென்ற சூட்சும இறை சொரூபமாகும்.

இவ்வுருவகமாகிய ஜடமும், வினைப் பொம்மையாகிய ஜடமும், தாமே இயங்க முடியாது. ஆகவே இவை இரண்டும் எப்படி இயங்குகிறதென்றால்? வினை உடலுக்கு "மனமும்"! ஜடசொரூப உலகிற்கு, விதியென்ற இறைவனும், இருந்து கொண்டு ஒழுங்காக பாரபட்ச தோஷமில்லாமல் நடைபெறுகிறது.

ஆனால் "சங்கல்ப விகல்பமாகிய"! (கற்பனையும், அதில் இன்ற உணர்வும் கூடிய) இந்த மனமானது, உண்மை, உரிமை, அதிகாரம், ஆதிக்கம்



உ

இவைகளால் பீடிக்கப்பட்ட தன்மையினால்,
"சுகமாக" நடைபெறும் கர்மாவை,
"பழு உள்ளதாக்கி"!
பிறவிக்களை, மீண்டும் மீண்டும் பின்னிக்கொள்கிறான்.
ஆகவே இங்கு மனமே தடை! மனமே தடைநீக்கம்.
"குற்றமே" தடை! குற்றநீக்கமே தடைநீக்கமாகும்.

மனம் சூட்சுமமாக இருப்பதால், அம்மனம் தனியே இயங்க முடியாது. அதாவது ஒன்றைப் பற்றியே இயங்க முடியும். ஜடசொரூபமாகிய, "உடல் உலகை"! மனம் பற்றுவதானாலும், அதுவும் இயலாத காரியமே! ஆகவே ஜட சொரூப உடல் உலகை, இயக்கத்தின் காரணமாக, இது இத்தகையது, என்றும், இன்னது செய்யும் என்றும் "தோஷ குணங்கள்"! நம் கற்பனை வடிவில் கொடுத்தால்தான், அந்த சூட்சுமமான கற்பனை குணங்களை வைத்துக்கொண்டு, இந்த மனம் இயங்க முடியும். இந்த நாமரூப ஜட சொரூபத்தில், தாம் கொடுத்த குணங்களை வைத்து, ஆடும் இந்த மனமானது, கற்பனை சொரூபமான, சூட்சுமமான இறைவனிடம், இம்மனம் செல்ல முடியாது. காரணம் என்னவென்றால்? (சென்றால் மனம் மறைந்துவிடும்)

A. இறைவனின் மாயையில், தோன்றிய இம்மனமானது அங்கு சென்றால் இல்லாமல் மறைந்துவிடும்! மறைந்தே ஆகவேண்டும். இதுவே நியதி! (சமுத்திரத்தின் உப்புபொம்மை போல்)

B. இறைவன் ஸத்வ குண சம்பன்னன். ஸத்வ குணத்தில் மனதின் விளையாட்டு இருக்க முடியாது. இருக்கவும் கூடாது.

உ



(ஸத்வ குணம்)

ஸத்வ குணத்தில், அமைதி, சாந்தி,
ஆனந்தம் இவைகளே உண்டு. ஆகவே அங்கு
சென்றால் மனதின் "தூக்குணம்"!
அழிந்து "சத் குணம்" என்ற ஏக குணம்
"ஒன்றே" இருக்க முடியும்! இருக்கக் கூடும்!

C. இறைவனின் ஸத்வ குணமாகிய, ஏக குணத்தில் மனம் ஈடு
பட்டால், அஹங்காரம், அதிகாரம், ஆதிக்கம் அபிமானம்
இருக்கப் பாதையில்லை.

D. மேலே சொன்ன குணங்கள் இல்லையானால், அது மனம் என்ற
பெயரும் அழிந்து, "அறிவு" என ஆகி விடும்.

E. மனம் அறிவாகி, அது மேலும் "மறைந்தா
கமே" யன்றி நாமரூப "ஜகத்தாக" முடியாது
ஆகவே நாம் "ஸத்வ குணம்" ஒன்றை மட்டும்
ஏற்றுக் கொண்டால் போதும். மற்றும் மேல்நோக்கிய நிலை
கள் தாமே உண்டாகிவிடும். காரணம்?
அனைத்தும் அவன் பொருள் என்றும்; அனைத்தும் அவன்
செயல் என்றும்; அவனன்றி அணுவும் அசையாது
என்பது ஸத்தியமானால் மனம் எப்படி இருக்க முடியும்?
மனதாலேயே அதிகாரம், அஹங்காரம் ஆதிக்கம் செலுத்திய
உனக்கு, இருப்பேது? இயக்கமேது? அங்கு நாமரூப குணமேது?



உ ——— ஏககுணம் என்ற, மனம் எந்தவிதமு, இறை சொரூபமாகிய "ஸத்வகுணத்தில்" நின்று விட்டால், மனம் மனமாக இராது. மனம் அறிவாக இருக்கும். மனம் மேலும் மேலும், மேல் நோக்கிச் சென்றால், "நிர்க்குணம்" என்ற நிலையின் "மஹத்தாகி" "அகண்ட பர வெளியாகிய" சர்வசாட்சி நன்மையில், கரைந்து மயமாகி விடும்! அங்கு "மனமும்", அது தோன்றிய "மாயையும்" இல்லை. "நாம் நாமாக" இருப்போம் "நாம் அதுவாக" இருப்போம்.

கேள்வி:— ஐயா! நாங்கள் மடலில், இறை நிலை ஜீவரட்சிப்பு என்றும். குருநிலை ஜீவ அழிப்பு (அழைப்பு) எனவும்; சொல்கிறீர்களே? அழித்தல் என்றால், சம்ஹாரம் (கொல்லுதல்) எனப்பொருள் படுகிறதே; அந்த அழித்தலா? அல்ல ஜீவரட்சிப்பு, இறைநிலை யென்பது, எமக்கு விளங்குகிறது. ஆகவே இவ்விரண்டையும், சற்று விளக்கினால் நலமாக இருக்குமே?

பதில்:— நல்ல கேள்விதான். நீ சொல்லும் நிலையில், அழித்தல் என்றால், கொல்லும் சம்ஹார நிலை இல்லை. நான் ஜீவன் என எண்ணும், உன் அறியாமையின் "ஜீவத்துவத்தை" அழித்தலாகும்.



உ

அதாவது, இந்நிலையை ஸ்ரீமஹான்கள் மூன்றாக, பிரித்துச் சொல்லுவார்கள். அதாவது?

1. இறைநிலை "ஜீவ ரட்சிப்பு"!

2. ஸத்குருநிலை "ஜீவ அழிப்பு"!

3. சாமான்ய குருநிலை "ஜீவ சிட்சிப்பு"!

என மூன்றாக சொன்னார்கள். இனி இதன் விபரமாவது?

1. ஜீவ ரட்சிப்பு:— இது இறைநிலையாகும். உணவு, உடை, இருப்பிடம், ஆகிய இம்மூன்றும் அவரவர் "வினையறிந்து"! விகிதாச்சாரப்படி, பேதமற்ற நிலையில், "ஒருகுறையும்" (ஒருவிநாடியும்) தப்பாமல், ஆங்காங்கே, அப்போதைக்கப்போது, இச்ஜீவர்களின் கொடுக்கல் வாங்கல் என்ற நிலையில், பண்டப்பரிவர்த்தனமாக (வியாபாரமாக) "தெய்வம் மனுஷ்யாணம்"! என்ற உண்மையின் வேத சாஸ்திரப்படி, கொடுத்து அரவணைப்பது ஜீவ ரட்சிப்பு ஆகும்.

3. ஜீவ சிட்சிப்பு:— இது சாமான்ய குருநிலையாகும்! வேத சாஸ்திர பாடங்களில், அறிந்து வித்தைகளையும் அதை போதிக்கும் நிலையில், கண்டிப்பும், தண்டிப்பும், அவசியம் உண்டு. இதைபடிக்கும் போது, எல்லா அன்பர்களுக்குமே இக்கேள்வி எழுவது சகஜமே! அதாவது??? (கண்டிப்பு தண்டிப்பு இல்லாமல், பாடம் எவ்வாறு நடைபெறும்?)



உ

கலிதோஷத்தால் அனைத்தும்
பிடிக்கப்பட்டு விட்டதால், இதை மறுக்கவோ,
மாற்றவோ முடியாது தான்.

இதை கவனி!

கண்டிப்பும், தண்டிப்பும் (சிட்சிப்பும்) "கொடூர குண" சம்பந்தமாகும். எத்பாவம் தத் பவதி, என்ற நிலையில், "நீ எக்குணம் கொண்டு பாடம் எங்கு போதிக்கிறாயோ, அங்கு "அக்குணம்தானே பதிவாகும்"! பின் அங்கு சத்வ குணமும் (அடுத்த நிலையான) நிர்குணமும், எப்படி பதிவாகும்? எப்படி இருக்க முடியும்?

சாந்தி, அன்பு, கருணை, பொறுமை, குற்றம் குறை காணாமை, பேதம் காணாமை, விருப்பு வெறுப்பு இல்லாமை, இவை எப்படி நிலைபெறும்? எந்த விதையை, நாம் ஊன்றுகிறோமோ, அதன் பலன்தானே, நாம் அனுபவிக்க முடியும்? நாம் எதைக் கொடுக்கிறோமோ, அதைத்தானே வாங்க வேண்டும்? நாம் எதை வாங்குகிறோமோ, அதைத்தானே கொடுக்க வேண்டும்??



# “அதுதானே ரகசி!”

ஆனால் ஓர் உண்மை: கண்டிப்புடனும், தண்டனையுடனும், வேத சாஸ்திர பாடம் போதித்தால்! அது அனுபவ ஞானமல்ல! அது வாய்ஞானமே! மேலும் கண்டிப்பு தண்டிப்புடன், பாடம் போதித்தால்? அந்த “வேகத்தில்” அது நிலைபெற்று நிற்பது போல் நிற்கும். அது “நிலைக்காது”! எந்த வேகத்தில் அது வந்ததோ, அந்த வேகத்தில் அது “மறையும்” அல்லது “மாறும்”! இது அனுபவ ஞானிகளின், முடிந்த கருத்தாகும்!

இதமாகவும், மிதமாகவும், இறை உணர்வோடும், பொறுமையோடும் போதித்தால், அது வாய் ஞானமல்ல! அது அனுபவ ஞானமாகும்! ஆனால் அது உடனே நிலைக்காது! உடனே பலன் தராது! விதைத்த விதை உடனே முளைக்காது! கருவுற்ற உடனே குழந்தை பிறக்காது! ஆனால் கிடைக்கும் “பலனே நிலைபெறும்”; “அழியாது”! அது மெல்லப் பாயும் ஜலம் போலாகும்! ஆமாம்???



இக்காலம் "கலியுக கம்யூட்டர்" காலமாகும்! வேகத்தோடு கூடிய, அவசர காலமாகும்! உடனே (பதில்) "பலன்"! தெரிய வேணுமென்ற துடிப்பான காலம்!

இனி இதை மாற்றவோ, மறுக்கவோ, விலக்கவோ, எவராலும் முடியாது தான். இதைச் சொன்னாலும், பலமுறை விளக்கினாலும், செவிடன் காதில் சங்கு ஊதிய நிலையும்; "புரியாத புதிராகவும்" தான் தோன்றும்! ஸத்தியத்தை நோக்கிச் செல்லும் "ஸ்ரீகுருவும், ஸ்ரீபாதுகையும்!" கண்டிப்பும் தண்டிப்பும் நிறைந்த "சிட்சிப்பு!" இல்லாமல் இருக்க வேணுமென்று, ஸ்ரீபாதம் பற்றி வேண்டுகிறேன்!

௨. ஜீவ அழிப்பு:— இது ஸத்குரு செயலாகும். இது மரணம் என்ற, அதாவது கொலையென்ற, சம்ஹாரம் என்ற அழிப்பு நிலை இல்லவே இல்லை! இதை ஜீவரட்சிப்பு என்ற, இறை நிலையில் பார்த்தால், உடல் உலக நிலையில் தோன்றும், இறைவன் செயலாகு



"மண்! பொன்! பெண்!" என்ற பிரவர்த்தி நிலையில், "நாமரூபமாக!" தோன்றி, ஒன்றுக்கொன்று ஆதாரமாக! ஆதரவாக! ஆகாரமாக! "ஆதரிக்கும்" நிலை 'ரட்சிப்பாகும்!

இங்கு ஜீவ அழிப்பு என யாம் குறிப்பிடுவது :— அறியாமையின் மனிதன் நான் ஜீவன் என்கிறான். யாம் நிறைபர சொரூபமே என்கிறோம். உறவு நட்பு உண்டு என்கிறான். இது அவரவர் வினையின்படி போட்ட வேஷம் என்கிறோம். சொந்த பந்தம் பாசம் உண்டு என்கிறான். வினையை பரிமாற்றம் செய்ய வந்த பதுமைகள்தான் என்கிறோம். பொன் பொருள் சுகம் என்கிறான். அவை அனைத்தும் மண்ணே என்றும், சிப்பியில் தோன்றிய வெள்ளியென தோன்றும், ஓர் மயக்கமே என்கிறோம். ஆண் பெண் உடல் உறவே, சொர்க்கம் என்கிறான். அரிப்பெடுக்கும் படை போன்றது, உன் போகம் என்கிறோம். பட்டம் பதவி புகழ் பேர், இல்லாமல் வாழ முடியாதே என்கிறான். அவை அனைத்தும் வினையினால் வந்த, ஜனன மரணப் படுகுழி என்கிறோம். சொந்தபந்த உறவும், பணமும் இல்லாமல், வாழமுடியாதே என்கிறான்.



உ

அவைகளுக்குந்தும், அவைகளாய் நிற்கும்
ஸ்ரீபகவானை ஏன் மறந்தாய் என்கிறோம்?
[illegible]ணமான வார்த்தைகளும், அதன் செயல்களும்,
ஏன்வரவேண்டும் என்கிறான். அவைகளை
நீதானே கொடுத்தாய், அப்படி கொடுத்ததை
நீதானே வாங்கவேண்டும் என்கிறோம்? நான் கொடுத்தது
எனக்கே தெரியவில்லையே என்கிறான். நான், என்றல்,
என்னுடையது, என்ற அஹங்காரமும், அதிகாரமும்,
அபிமானமும், மறைந்துக் கொண்டதால், உனக்கு தெரியவில்லை
என்கிறோம். நானும் கோவில் போகிறேன். வீட்டில் பூஜை
செய்கிறேன். பஜனை, ஸத்ஸங்கம், ஸத்காரியம் தான
தருமம், செய்கிறேனே, என் கஷ்டம் ஏன் நீங்கவில்லை?
என்கிறான். நீ பண்ணும் அனைத்தும் வியாபாரமாகவும்
(எதிர்பார்ப்பு) விளம்பரமாகவும் (பிறர் பாராட்டும் நிலை)
ஆடம்பரமாகவும் (வீண்டம்பமான நிலை) இருப்பதால் அது
பலன் தரவில்லை, என்கிறோம். என் வீட்டில் மடி, ஆச்சாரம்
அனுஷ்டானம், பூஜா விதிகளுடன் தானே இருக்கிறோம்
என்கிறான். இவை அனைத்தும் புறச் செயல் தானே? உன்
உணர்ச்சிகள் சம்பந்தப்பட்டது தானே? அக உணர்வாத



"நீ ஒருவனே வேண்டும்" எனதெறி அழுதாயா? கண்ணீரை காணிக்கை ஆக்கிறாயா? உன் உள்ளத்தை அவனுக்கு ஆலயமாக்கிறாயா? என்கிறேன். நானும் பலகாலம் ஞானபாடம் கேட்கிறேனே, என் உள்ளம் இன்னமும் பக்குவப்படவில்லையே, காரணம் என்ன? என்கிறாய்.

"பிறர் மேலேயே கவனம்" செலுத்துவதனால் வரும் அஹங்காரம், அதிகாரம், உடைமை, உரிமை, ஆதிக்கம், பாராட்டுதல் என் "குறைக்க" மாட்டேன் என்கிறாய் என்றேன். (அவைகளை நிறுத்த முடியாது, ஆனால் குறைக்கலாம்)

இப்படியாக இன்னமும் பலநிலைகளில், அறியாமையால் காமமும், கலக்கமும், கவலையும், பயமும் கொண்ட "கவனக்குறைவான நான் ஜீவன்" என்று ஜீவத்துவத்தை அழிப்பதுவே ஜீவ அழிப்பாகும். ஜீவன் நான் என்ற நிலைமாறி, நாம் அதுவே அதுவே நாம் என்ற பரஸ்திதியை பெறுவதுவே



# "ஆத்ம சாட்சாத்"காரமாகும்.

## இதுவே ஜீவத்துவத்தை அழித்து ஜீவன் முக்தியைக் கொடுக்கும், ஜீவ அழிப்பாகும்!!!

# "ஓர் சாதகனின் தெளிவு"!!!!!

1. ஸ்ரீ நாரதர் இருமஹான்களிடம் சொன்னார். இப்போது ஸ்ரீ பகவான் ஊசித்துவாரத்தின் வழியாக, ஓர் ஒட்டகத்தை, போகவும் வரவும் செய்து விளையாடிக்கொண்டிருக்கிறார் என்றார். அவ்விருவரில் ஒருவர் சொன்னார், ஊசித்துவாரம் எங்கே? ஒட்டகம் எங்கே? போவதாவது? வருவதாவது? இது சுத்தப் பொய் என்றார். அவர் நம்பிக்கை இல்லாத தன்மையினால், இறைநிலையை அடையவில்லை. மற்றவர் சொன்னார், இறைவன் சர்வ ஆற்றல் உள்ளவர். அவரால் ஊசித்துவாரத்தை, பெரிது பண்ணவும் முடியும். ஒட்டகத்தை சிறிது பண்ணவும் முடியும். இறைவனால் ஆகாத காரியம், எதுவும் கிடையாது, என முழுமையாக நம்பினார், அவர் இறைநிலையை அடைந்தார். ஆகவே இறை நம்பிக்கை பூரணமாக வேண்டும்.

நாம் அஞ்ஞான உறக்கத்தில் இருக்கிறோம். ஆனால் நம் குருவோ ஞான விழிப்பு நிலையில் இருக்கிறார். அவர் சொல்வதை அப்படியே, ஏற்போம் என்ற சிரத்தையும், நாம் குரு கிருபையால், ஜீவன் முக்தி பெறுவோம் என்பதைவிட, பெற்றுவிட்டோம் என்பதில், அசைக்கமுடியாத வைராக்கியம் வேண்டும்!



உ

௨. மண், பெண், பொன், இம்மூன்றிலும், சர்வ
ஜாக்ரதையாக இருக்க வேண்டும்.
மண் என்றால் விரிவுபடுத்த வேணுமென்ற ஆசை.
பொன் என்றால், சேகரிக்க சேமிக்க வேணுமென்ற ஆசை.
பெண் என்றால், மோஹம் என்றும், போகம் என்றும்
பொருள்படும். ஆண் பெண் உறவில், வரும் ஆசை. நாமரூப
எந்த பொருள் மீதும், வெறித்தனமான ஆசை. ஆகிய இந்த மூன்று ஆசை
களிலும்; ஆசையே துன்பத்திற்கு காரணம். என்பதை உணர்ந்து,
இவை அனைத்தையும், கோடானுகோடி ஜன்மாவில், எடுத்தெடுத்து
அலுத்துப்போனேன் ஐயனே! இவை போதும் ஐயனே போதும். என
பூரண நிறைவு வேண்டும். வெறுக்கவோ, விரோதிக்கவோ,
துவேஷிக்கவோ, நிக்ரஹம் பண்ணவோ, (துறக்கவோ) வேண்டாம்.

௩. உறவோ, நட்போ, இவை சொந்த பந்த பாசத்தின் நிலை
அல்ல. அவரவர் புண்ணிய பாபங்களை, ஒருவருக்கொருவர்,
பரிமாற்றம் செய்ய வந்த கூட்டம் என்ற, திடநம்பிக்கையுடன்
சந்தேகம், கலக்கம், பயம், இவைகளை ஒழித்துவிட்டு, நாம் நமக்காக
கொண்ட கடனை வாங்கிவிட்டு, பட்ட கடனை தீர்த்துவிட்டு,
ஸ்ரீபகவான் நம் மீது கருணை கொண்டு, அவர்களை வரச்செய்தும்,
நம்மை போகச்செய்தும், எவ்வாறு எளிதாகவும், அதிசுலபமாகவும்,
செய்வதை எண்ணி, எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்!
எல்லாம் உன்னுடையதே! என பூரண நிறைவுடன், எக்குறையும்
இல்லாமல், இறை குரு உணர்வோடு இருக்க வேண்டும்.



4. ஸ்ரீ பகவானிடமும், ஸ்ரீ குருதேவரிடமும், எந்த எதிர்பார்ப்பும் இருக்கக்கூடாது.

ஸாவத்திற்குரியதை ஸ்ரீ பகவான் சிரத்தையுடன் செய்கிறான், என்ற நம்பிக்கையும். ஸ்ரீ குருதேவரோ மனமற்ற அவர்; மன முற்ற நம் மனதை; அந்தர்யாமியாக, இருந்து எடுத்து எடுத்து, துடைத்து துடைத்து; மனதை அறிவாக்கி (இறைநிலை தந்து) அறிவை மறைத்தாக்கி, (பரநிலை தந்து) ஜீவாத்மாவாக இருந்த எம்மை, பரமாத்மாவாக ஆக்கி, அவர் பூரண நிலையாகிய, பரசொரூபத்துடன் இரண்டற கலக்கச் செய்து, சொல்லவொண்ணா விளக்கவொண்ணா, நிலை தந்தவரை எப்படி போற்றுவது? எப்படி புகழ்வது? அது உபசார வசனமே! என ஆழ்ந்த அமைதி சாந்தியுடன், சும்மா சுகமாக இருப்போம்.

5. ஸ்ரீ குருதேவர் சொல்லும், அனுபவ பாடங்களில், ஏதேனும் உனக்கு, உணர முடியவில்லையாயின்; ஆத்திரம் அவசரம் கொண்டு, துடிப்பின் வேகத்தை காட்டாதே! இங்கு பொறுமையே உன் இறை குருவாகும். இங்கு கலக்கம் உற்ற இடத்தில் தான். நீ கேட்டு அவர் தருவதாக இருந்தால், நீ இன்னமும் பக்குவப் படவில்லை. ~~கலக்கமுற்ற இடத்தில்,~~ நீ கேட்காமலேயே அவர் கொடுத்தால், நீ பக்குவப் பட்டு விட்டாய். இங்கு உன்மனமே பக்குவத்திற்கு, தக்கபடி அது அமையும். காலம் முன்பின் ஆகலாம். அது தந்தே ஆக வேண்டும்! நீயும் பெற்றே ஆக வேண்டும்! நீயும் முழுந்தே ஆக வேண்டும்!



6. ஞானதிருஷ்டி என்பது, தூர தேசங்களையோ,
வேறு உலகங்களையோ, கோடானு கோடி கோள்
களையோ, அங்குள்ள நிலவரங்களையோ,
பார்ப்பதும் அல்ல. கேட்பதும் அல்ல. உணர்
வதும் அல்ல. (அது இறைவன் செயல்) அவைகள் தேவையும் இல்லை.
அவை மாயா காரியமாகும். அவை ஸ்ரீ பகவானுக்குரியதாகும்.
ஞானிகளுக்கு பக்குவ ஆன்மாக்களின், உள்ளமே தேவை.
(மனமே முக்கியம்) எத்தனை கோடி அண்டங்களில், எங்
கெங்கு, எவ் வடிவில் இருந்தாலும், உள்ளம் மட்டும், மாயா
வின் மைந்தனை, (மாயா சூட்சும வடிவமாக) இருப்பதால்
இறை நிலையை, நமக்குள் அடங்கிய நிலையில் ஞானி ஒருவனே வைத்திருப்பதால்
உள்ளங்கை நெல்லிக்கனி போல், உணர முடியும்.
(தானுவதல்ல. காண்பது மனம். அறிவது அறிவு. உணர்வது)
இது சர்வசாட்சித் தன்மையாகிய, அகண்ட பாவனையோடு,
இருப்பவர்களுக்கே சாத்தியமாகும். இந்நிலை பெற்றவர்,
எந்த நாடு, எந்த கோள், எந்த அண்டம், இவைகளில் உள்ள
பக்குவ ஆன்மாக்களை மட்டும் கண்காணிக்கவும்,
கடைத்தேற்றவும் முடியும். அவர்கள் மறைநிலையில்,
பக்குவப்படுத்தியும், பக்குவம் கொடுத்தும், ஜீவன்முக்தராக்க
முடியும் என்பது, ஸ்ரீ மகான்களின் அனுபவமாகும். ஆகவே



உ

தன்னை அறியும் அறிவு பிரகாசிப்பதே
ஞானதிருஷ்டி யெனச் சொல்லுவார்கள்.
ஊர், உலக, ஜீவர்களையும், அதன் இயக்கங்
களையும், அறிவதோ சொல்வதோ ஞானதிருஷ்டி
அல்ல. ஒவ்வொரு சாதகர்களும், தந் கவன சக்தி
யோடு, ஸ்ரீ ஸத்குரு வாக்கிய சிரத்தையில், கவனமாக
வும், தம்மையே முழுமையாக, அர்ப்பணித்த நிலையிலும்,
நான், என்றல், என்னுடையதை, இல்லாமல் கரைத்துக்
கொண்டீர்களானால், உங்கள் ஸத்குரு தேவரின், ஞான
திருஷ்டியிலிருந்து, தப்ப முடியாது. இது ஸத்தியம்!
(அதுவே புலி வாய் மாமிசம் போல் ஆகும்)

7. நீ கொண்டு வந்ததும் இல்லை. கொண்டு போவதுமில்லை.
உன் விளையாடவோ, இந்த மண்ணிலேயே எடுத்ததாகும்.
அதையும் எங்கும் கொண்டு செல்ல முடியாது. பின் ஏன்
இந்த உரிமை போராட்டம்? ஏன் இந்த உரிமை போராட்டம்?
அவன் நாமாவைச் சொல்லி, எல்லாம் நீயே என
விளையாடலாமே? ஏன் முந்திரிக் கொட்டையைப் போல,
நான்! நான்! நான்! எனச் சொல்லி வினையின் பாரத்தை
ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்? விளையாட உரிமை உண்டு.
வினையமாக உரிமை கொண்டாட இடம் இல்லை!



உ

8. அருளுக்கு எங்கும் கண்களும்; எங்கும் காதுகளும், எங்கும் கால்களும், எங்கும் அபய கரங்களும், கிருபை தந்தோம் அபயம் தந்தோம், பயம் தயக்கம் வேண்டாம், என குரல் கொடுக்கும் வாக்கும், எங்கும் உண்டு என்பதே சத்தியமாகும். வேண்டி அழுதால், உன்னைப் பார்க்கும். உருகி அழுதால் உன் குரல் கேட்கும். கூப்பிட்டவுடன் ஓடி வரும். நீயே கதி என்றால் உன்னைத் தம் அபய கரங்களால் அரவணைக்கும். யாம் இருக்க பயம் ஏன்? என அபயஸ்தம் தரும், அருள்வாக்கும் எப்போதும் உண்டு! பின் உனக்கு மூன்று கவன சக்தி எதற்கு? உனக்குத் தற்காப்பு சக்தி தான் எதற்கு?? தற்கவன சக்தி ஒன்றே எல்லாம் நீயே என்ற தெய்வபலம் ஒன்றே போதுமே? அளவோடு புசி! அதாவது எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே என்ற நிலையில், வாக்கில் இனிமையும், கனிவும், இறையுணர்வும்! வாழ்க்கையில், எளிமையும், பணிவும், எல்லாம் நலமே என்ற நிலையில், பொறுமையும் கொண்டால் முடிவில் அவன் ஆகலாம்! பின் அது ஆகலாம்! இங்கு உன் நம்பிக்கையே உன் இரு கைகளாகும்! நீ கொண்ட வைராக்கியமே உன் இரு கால்களாகும்!!



# 9. உ

உன் பாவத்தின் வினைக்கணக்கே,

உனக்கு தெரியாமலிருக்க, பிறிதொரு
பாவக்கணக்கு உனக்கு எப்படி தெரிய முடியும்?
அப்படியானால், பிறர் செய்யும் செயலையும்,
பிறர் பேசும் வார்த்தையுமே குற்றமாக
பாவனை செய்து திருத்த முயற்சிக்கிறாயே, இது என்ன
அறிவீனமான செயல்? நீ பிறர் செய்கையையும் பிறர்
வார்த்தையையும், உன்னால் ஏற்க முடியவில்லையென்றால்,
பிறர் உன் செய்கையையும், உன் வார்த்தையையும், ஏற்க
வில்லையே, என குறைபடுவது ஏன்? இதில் ஓர் ரகஸ்யம்
என்னவென்றால்? நீ பிறருக்கு மதிப்பு மரியாதை,
(பெரியவன் சிறியவன், படித்தவன் படியாதவன், ஏழை பண
க்காரன், உன் வேலையில் மேல் கீழ் உள்ளவன் என பாராமல்)
கொடுத்து, நீ அடங்கி நடந்தால், அனைவரும் உனக்குள்
அடங்கி நடப்பர். அடங்கியே ஆக வேண்டும்!
இல்லையேல், எல்லாம் அவன் செயல் என்ற, வைத்திய
வாசகம், பொய்யாகி விடும்! மாறாக நீ அவர்களை மதிக்
காமல், அடக்க எண்ணினால், அவர்கள் உன்னை அடக்கி விடுவர்.
(அடக்கியே ஆக வேண்டும்)
மதிப்பும் மரியாதையும், நீ பேதம் இல்லாமல் கொடுத்தால்,
உனக்கும் மதிப்பு மரியாதை, தானே கிடைக்கும். நீ பேதமும்
குற்றம் குறையும் கண்டால் அனைவரும் உன்னிடம், பேதமும்
குற்றம் குறையும் பார்க்கத்தான் செய்வர். இதுவே நியதி!



ஓ

## 10. குடும்பிகளுக்கு ஓர் தர்மம்:

ஓர் ஆண்மகன், வேலை தேடி பணம் சம்பாதியம் செய்யும் வரை (படிப்போ, அது சம்பந்த உணவு, உடை, இருப்பிடம் இவைகளுக்கு) அப்பா, பாட்டன் சொத்தில், செலவு செய்ய உரிமை உண்டு. பணம் தேடி வருமானம் வந்தபின், அப்பா பாட்டன் சொத்தில், ஒரு பைசாவாவது எடுத்து உனக்கு செலவு செய்ய உனக்கு உரிமை இல்லை, அது மஹாபாபம் என்றும். அதற்கு ரௌரவாதி நரகம் உண்டென்றும், உண்மையின் ஸாஸ்திரம் சொல்கிறது. அந்த ஆண்மகன், தன் மாதா பிதா ஒருவரோ, அல்லது இருவருமே இருந்தால் அவஸ்யம் அவர்களுக்கு, உணவு உடை இருப்பிடம் தந்தே ஆகவேண்டும்! அப்படி கொடாதவன் பிறந்ததும் வீணே! அவனுக்கு பக்தியும் முக்தியும் இல்லை. நாம்தான் ஆத்ம சாதனை செய்கிறோமே, என அலட்சியம் செய்யாதீர். ஆனால் சாதனை முதிர்ச்சியானால், இந்த சட்டம் அவர்களுக்கு இல்லவே இல்லை. இச்சாதனை முதிர்ச்சியை, உன் அனுபவத்தினால் உணரலாம். மேலும் ஆண்களோ, பெண்களோ, உடல் உழைப்பு இல்லாமல், உணவு, உடை, இருப்பிடம் ஆகிய இம் மூன்றும் பெற்றால், பாபத்தையே தேடிக்கொள்கிறோம், எனப் பொருள் கொள்க. உழுது கொண்டிருந்தாலும் அழுது கொண்டிரு என்பது ஓர் பழமொழி! அதாவது கர்மா சம்பந்த உழைப்பு இருந்தாலும், ஸ்ரீ பகவன் நாம ஸ்மரணை, உருக்கமுடன் இருக்க வேண்டும். அங்கு கர்மாவும் முடியும். வேறு கர்மாவும் தொடராது!



உ

# "ஸ்வய அநுபவம்"!

எண்ணம், சொல், செயலால் எவ்விடத்தும் "அடங்கி இரு"! "அடக்க எண்ணாதே"! "இதமாக, மிதமாக, இறை உணர்வுடன் பேசு"! எதையும் "நலமாக எண்ணு"! "நலமாகவே" இருப்பாய்! "ஆத்திரம்", "அவசரம்", "வேகம்" வேண்டாம்! "பொறுமை", "அன்பு", "பணிவு", "கனிவு"! அவஸ்யம் வேண்டும்! "தேவையும்", "ஆசையும்" குறைத்துக்கொண்டே வந்தால், அவை தாமே நின்றுவிடும்; அவைகளை வெறுத்து விலக்கினால், அவை வேறு ஓர் "நாமரூபம்" தாங்கி வந்தே தீரும்! தேவைகளையும், ஆசைகளையும், இறைவன் கருணையாக எண்ணி, "போதும்" என "நிறைவு" கொண்டால் அவை தாமே மறையும்!



"காண்பதையும்", "கேட்பதையும்"! அப்படியே நம்பிவிடாதே. அங்கு இறைவுணர்வோடு, பொறுமையுடன் காத்திருந்தால், அவஸ்யம் விளக்கம் நன்கு தெரியும். உனக்கு மேலே கூறியவைகளில், "கலக்கம்", "களங்கம்", "சந்தேகம்", "பயம்"! ஏற்பட்டால் அதுவே பலிதமாகும்! அங்கு இறைருரு உணர்வு இருந்தால், மேலே கூறிய குண தோஷம், தோற்றுமறையும்! எல்லாம் "அவன்" பொருளே! எல்லாம் "அவன்" செயலே என, இவை உனக்கு அனுபவமானால், "அவனன்றி" அணுவும் அசையாது, என்பதுவும் அனுபவமாகும். அங்கு "உனக்கு"! இருப்பேது? இயக்கமேது? வினையேது? "மனதின்" பிடிப்பே பந்தம்! "மனதால்" விட்டால் மோக்ஷம். உன் வினையின்படி, இயல்பாக "இருப்பதிலும்", "கிடைப்பதிலும்", "நடப்பதிலும்"! அவை இறை கருணையென நம்பு. அங்கு வினையில்லை. ஜன்மமில்லை!



"நான்" இறந்தால் "நாம்" ஆகலாம்!
"நாம்" மறைந்தால் "அது" ஆகிநிறையலாம்!
"நாம் அது" ஆகி நிறைந்தால், பிரம்மா
னந்த சுவையென ஆகலாம்! "பிரம்மானந்தம்"!
"நாம்" என ஆகிவிட்டால், அதை சொல்லவோ, விளக்
கவோ, வாக்கும் இல்லை! வரிவடிவமும் இல்லை!
"மாயை" என்றால் மருட்சி! அதாவது ஒன்று பலவாகுதல்!
"மனம்" என்றால் அவற்றில் மயங்கி கலங்கி வீழ்தல்!! (வீழ்தல் என்றால் ஜனன மரணத்தில் வீழ்வதாகும்)
மனம் தோன்றிய இடமே மாயையாகும். ஆகவே மனதை மாயையி
டம் விட்டுவிட்டால், அங்கு "மருட்சியும்" இல்லை. (மருட்சியும்)
"மயக்கமும்" இல்லையென்றாகிவிடும். அப்படி
விடும் நிலை:- "எல்லாம் நீயே! எல்லாம்
உன்னால்! எல்லாம் உன்னுடைய
தே!!!"
என நிர்மூலமாக விட்டுவிடு. அங்கு நீ "பூரணமாகவே!"
(காலாதீத பரசொரூபமாகவே) இருப்பாய். இது ஸத்தியம்!
எல்லாம் ஒன்றே! அது நமே!
அது சகலமே!
அது யாமே! அது நீயே! இது ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!!

பாபா.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!